## தஞ்சையில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

# திருச்சி மத்திய - வடக்கு மாவட்டக் கழகத்தினர் பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி - ந.தியாகராஜன் அறிக்கை!





திருச்சி, ஆக. 3-

திருச்சி மத்திய மாவட்ட திமுக செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ந. தியாகராஜன் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:

பயிர்க்கடன் தள்ளுபடியில் மோசடி - மேகதாது அணைக்கட்டும் பிரச்சனையில் கைக்கட்டி வேடிக்கை பார்ப்பது, மேட்டூர் அணையில் இருந்து ஜூன்12 அன்று தண்ணீர் திறக்காதது, காவிரி பிரச்சனையில் கர்நாடக முதல்வரை சந்திக்க போவதாக பொய்யான தகவல்களை பரப்புவது இப்படி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு துரோகத்திற்குமேல் துரோகம் செய்யும் த.வெ.க அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (03.08.2026-திங்கள் கிழமை) காலை 9.30 மணியளவில் தஞ்சை பனகல் கட்டிடம் அருகில் எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவரும் கழக முதன்மை செயலாளருமான அண்ணன் கே.என். நேரு அவர்களின் முன்னிலையிலும் நடைபெறவிருக்கிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள், விவசாயிகள், விவசாய சங்க தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்துகொண்டு த.வெ.க அரசின் முதல் வரை கண்டித்து தஞ்சையில் நடைபெறுவிருக்கும் ஆர்ப்பாட்டத்தினை மாபெரும் வெற்றிப்பெற செய்ய வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கோவையை வறட்சி மாவட்டமாக அறிவிக்க

# மாவட்ட ஆட்சியரிடம் விவசாயிகள் வலியுறுத்தல்!

## குறைதீர் கூட்டத்தை புறக்கணித்து போராட்டம்!

கோவை, ஆக.3-

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சுரேந்திரன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அழகிரி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் தமிழ்ச் செல்வி, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சித்தார்த்தன், தென்னை வளர்ச்சி வாரிய இயக்குநர் அறிவாழி உள்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தோட்டக்கலை துறையில் ஆடி பட்டத்திற்கான விதை தொகுப்பு வழங்கும் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் துவங்கி வைத்தார். பின்னர், விவசாயிகள் அனைவரும் அரசால் அறிவிக்கப்பட்ட முக்கிய பயிர்களுக்கு பயிர்காப்பீடு செய்ய கேட்டு கொண்டார்.

இதில் மாவட்டத்தில் தென்னை பிரதான பயிராக இருப்பதால் தென்னைக்கும் பயிர்காப்பீடு வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். விவசாயிகளுக்கு மற்ற துறையில் உள்ளது போல் ஒரு டோல் ப்ரீ நம்பர் வேண்டும் என வலியுறுத்தினர்.

தமிழ்நாடு விவசாய சங்கத்தினர் கோவை மாவட்டத்தில் நீண்ட நாள் பயிர்களான தென்னை, வாழை மஞ்சள் போன்றவைகளும், குறுகிய கால பயிர்களான தக்காளி, பீர்க்கன், புடலை, அவரை, சின்ன வெங்காயம், சுரைக்காய், முட்டைக்கோஸ், காலிப்ளவர், வெண்டைக்காய், மிளகாய், பீட்ரூட் போன்ற காய்கறி வகைகளை விவசாயிகள் பயிர் செய்து வருகிறார்கள். இந்த சூழ்நிலையில் பருவ நிலை மாற்றத்தின் காரணமாக ஜூன், ஜூலை மாதங்களில் தென்மேற்கு பருவ மழையை முழுமையாக நம்பித்தான் விவசாயிகள் விளை பயிர்களை பயிர் செய்துள்ளோம். ஆனால், இந்த ஆண்டு கடந்த இரண்டு மாதங்களாக எதிர்பார்த்த தென்மேற்கு பருவமழை இல்லை. இதனால் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாய்க்கால், குளம், குட்டை, நொய்யல் ஆறு போன்றவைகளில் நீர்வரத்து இல்லாமல் நிலத்தடி நீர்மட்டம் 1,000 அடிக்கும் கீழ் சென்று விட்டது. தண்ணீர் பற்றாக்குறையினால் உற்பத்தி பாதிக்கப்பட்டு பெரும் பின்னடைவை விவசாயிகள் சந்திக்க கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது.

எனவே, மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து நிலவி வரும் வறட்சியை கருத்தில் கொண்டு, தென்மேற்கு பருவமழை பெய்யாத காரணத்தினால், கோவை மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினர். மேலும், விவசாயிகள் கடந்த ஜூலையில் திருமலையாம்பாளையம் பகுதியில் உள்ள தனியார் குடோனில் சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டு, பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட டன் கணக்கிலான யூரியா கடத்தலில் இதுவரை சரியான நடவடிக்கை இல்லை. இதில் தொடர்புடைய யார் மீதும் நடவடிக்கை இதுவரை எடுக்காமல் மாவட்ட நிர்வாகம் இருந்து வருகிறது என தெரிவித்து மாவட்ட ஆட்சித் தலைவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும், யூரியா கடத்தலில் இது வரை யாரையும் கைது செய்யாமல் மாவட்ட நிர்வாக அதிகாரிகள் அவர்களுக்கு ஆதரவாக செயல்படுவதாக விவசாயிகள் குற்றம்சாட்டினர்.

## விருதுநகர் மாவட்ட

# தீண்டாமை தடுப்புச் சுவர் அகற்றக் கோரி மனு!

### அமைச்சர் ராஜ்மோகனிடம் வழங்கல்!

ஈரோடு, ஆக. 3-

ஈரோட்டில் புத்தக கண்காட்சி திறப்பு விழாவில் பரபரப்பு விருதுநகர் மாவட்ட தலித் இளைஞர் பிரகாஷ் தீண்டாமை தடுப்பு சுவரை அகற்றக்கோரி பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகனிடம் தொடர்ந்து பத்தாவது முறையாக காலிலா விழுந்து மனு வழங்கினார்.

ஈரோட்டில் புத்தக கண்காட்சி துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது அமைச்சர்கள் ராஜ்மோகன், விஜய் பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்.

விழா மேடையில் அமைச்சர் ராஜ்மோகனிடம் விருதுநகரில் பட்டியலின குழந்தைகள் கல்வி கற்க தடையாக உள்ள தீண்டாமை தடுப்பு சுவற்றை அகற்ற வேண்டி பிரகாஷ் என்கிற தலித் இளைஞர் அமைச்சரின் காலில் விழுந்து கதறி மனு வழங்கினார்.

மனுவை பெற்றுக் கொண்ட அமைச்சர் ராஜ்மோகன், இதுகுறித்து ஆவண செய்யவுள்ளோம் என கூறிவிட்டு தன்னை பற்றி "திட்டி வீடியோ" வெளியிட்டுள்ளதாக அந்த இளைஞரை மேடையிலேயே ஆவேசமாக திட்டினார். பின்னர் ஆட்சியரிடம் கொடுத்து நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறினார்.

பிரகாஷ் அளித்த கோரிக்கை மனுவினை விருதுநகர் மாவட்ட ஆட்சியரிடம் கொடுப்பதற்கு பதிலாக விழா நடைபெற்ற இடத்தில் இருந்த ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமியிடம் அமைச்சர் கொடுத்துவிட்டு மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுப்பார் என சமாளித்தார். ஆனால் பிரகாஷ் சார் இது விருதுநகர் மாவட்ட பிரச்சனை அந்த மாவட்ட ஆட்சியரிடம் வழங்க வேண்டும் என கூறியதால் அசடு வழிந்த அமைச்சர் தனது நேர்முக உதவியாளரை அழைத்து மனுவை வழங்கினார்.

காவலர்கள் பிரகாஷை அங்கிருந்து வெளியேறினர்.

பிரகாஷ் ஏற்கனவே பல முறை மனு வழங்கியும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் தற்போது மீண்டும் வழங்கியிருப்பதாக தெரிவித்துள்ளார். கல்வி அமைச்சர் செல்லும் இடம் எல்லாம் சென்று இந்த மனுவை வழங்கி வருகிறார் ஈரோட்டில் பத்தாவது முறையாக மனு வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடதக்கது.

பட்டியலின குழந்தைகளின் கல்வி பாதிக்க கூடாது என்பதற்காக தீண்டாமை சுவரை அகற்ற அலைக்கழிக்கும் அமைச்சரின் செயலை பார்த்து விழாவிற்கு வந்திருந்தவர்கள் வேதனையடைந்தனர்.

## சேலத்தில் த,வெ,க நிர்வாகி மணிகண்டன் மீண்டும் பாலியல் புகாரில் 2–வது முறை கைது!

# 'தூய சக்தி' ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கும் லட்சணம்!

சேலம், ஆக.3-

சேலம் கொண்டலாம் பட்டியை சேர்ந்தவர் த.வெ.க நிர்வாகி மணிகண்டன் இவர் மளிகை கடை நடத்தி வந்தார்

இவர் பெண்களை ஆபாசமாக படம்பிடித்து அவர்களை மிரட்டி அவர்களிடம் பாலியியல் உறவு கொண்ட புகாரில் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு விசாரணை செய்ததில் அவரிடம் இருந்த மொபைல் போனை போலீசார் பறிமுதல் செய்து சோதனை செய்ததில் ஆபாச படங்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டவை இருந்ததோடு 50 க்கும் மேற்பட்ட குடும்ப பெண்களின் ஆபாசமாக படம் பிடித்து வைத்திருந்தது தெரிய வந்தது

இந்த வழக்கில் ஜாமீனில் வெளியே வந்த மணிகண்டன் மீண்டும் ஒரு பெண் சூரமங்கலம் போலீசில் தன்னை ஆபாசமாக படம் எடுத்து மணிகண்டன் மிரட்டியதாக புகார் அளித்தார்

இதையொட்டி இந்த புகார் குறித்து மாநகர போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தற்போது இந்த புகாரை த.வெ.க நிர்வாகி மணிகண்டனை கைது செய்வதில் காலதாமதம் செய்யப்படுவதாகவும் இந்த புகாரை திசை திருப்பும்

வேலையாக மாற்றப்படுவதாகவும் ஆளும் கட்சி த.வெ.க வுக்கு தொடர்ந்து அவப் பெயரை ஏற்படுத்துவதாக இருப்பதால் மணிகண்டணை கைது செய்வதில் காலதாமதம் செய்வதாக கூறப்படுகிறது தூய சக்தி ஆட்சியின் பெண்களின் பாதுகாக்கும் லட்சணம் இது தான்

## இடநெருக்கடியில் அத்தியாவசிய செலவா?

# முதல்வர் அலுவலகம் இடமாற்றப் பணிக்கு ரூ.11 கோடி நிதி ஒதுக்கீடு!

### பொதுமக்கள் ஆவேசம்!

சென்னை, ஆக.3-

சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள பழமையான புனித செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் முதல்வர் அலுவலகம் சுமார் 50 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.

தற்போது, நிர்வாக வசதிக்காக நாமக்கல் கவிஞர் மாளிகைக்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளது. இதற்கான பணிகள் அந்த மாளிகையின் பத்தாவது தளத்தில் நடைபெற்று வருகின்றன.

புதிய அலுவலகத்தில் முதல்வரின் அறை, தனிச் செயலர்களுக்கான அலுவலகங்கள், ஆலோசனைக் கூட்ட அரங்கம், உள்ளிட்டவை அமைக்கப்பட உள்ளன. இந்தப் பணிகளை 3 மாதங்களுக்குள் முடிக்க திட்டமிட்டு, அதற்கான செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே, முதல்வர் அலுவலகத்தை அமைப்பதற்காக ரூ.11 கோடி தமிழக அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக, இந்த பணிகளை செய்வதற்கான ஒப்பந்ததாரர்களைத் தேர்வு செய்து கட்டுமான வேலைகள் தொடங்கப்படும் எனவும் கூறப்படுகிறது. இதுதவிர, தலைமைச் செயலகத்தில் உள்ள அமைச்சர்கள் அறைகளைப் புதுப்பிக்கும் பணிகளும் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு அமைச்சரின் அலுவலகமும் சுமார் ரூ.15 லட்சம் முதல் ரூ.20 லட்சம் வரையிலான செலவில் புதுப்பிக்கப்பட்டு வருவதாகவும் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிதி நெருக்கடியில் செலவு தேவையா என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## தேனி மாவட்டம் – ஆண்டிபட்டியில்

# த.வெ.க. ஆட்சியில் காற்றாலை அமைப்பதில் முறைகேடு!

### தனியார் காற்றாலை மின்கம்பங்களால் சர்ச்சை!

தேனி, ஆக.3-

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள ஜீ.உசிலம்பட்டி ஊராட்சியில் தனியார் காற்றாலை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதற்காக த.வெ.க. ஆட்சியில் மாநில நெடுஞ்சாலை மற்றும் நீர்நிலைகளை ஒட்டி அமைக்கப்பட்டு வரும் மின்சார கம்பங்களால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் குற்றச்சாட்டு

ஜீ.உசிலம்பட்டி பகுதியில் செல்லக்கூடிய மாநில நெடுஞ்சாலையின் மிக அருகிலேயே தனியார் காற்றாலைக்கான உயர் அழுத்த மின்சார கம்பங்கள் நடும் பணி நடைபெற்று வருகிறது. எதிர்காலத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், சாலை மேம்பாட்டிற்காகவும் இந்த நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் போது, தற்போது நடப்படும் இந்த மின்கம்பங்களை அகற்றி வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய சூழல் உருவாகும். இதனால் அரசுக்கு பல லட்ச ரூபாய் வீண் விரயம் ஆகும் எனச் சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**கம்மாய் நீர்வரத்து பாதையில் அடைப்பு**

அதேபோல், அப் பகுதியில் உள்ள கம்மாய்க்கு மழைக்காலத்தில் தண்ணீர் செல்லக்கூடிய முக்கிய நீர்வரத்துப் பாதையிலும் இந்தத் தனியார் காற்றாலை மின் கம்பங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் மழைக்காலங்களில் தண்ணீர் தடையின்றி கம்மாய்க்குச் செல்வதில் பெரும் சிரமம் ஏற்படும் என்றும், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு சுற்றியுள்ள விளைநிலங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

**பொதுமக்களின் கோரிக்கை**

"பொதுமக்களின் நலன் மற்றும் அரசு நிதியைக் கருத்தில் கொள்ளாமல், தனியார் நிறுவனத்திற்குச் சாதகமாக நெடுஞ்சாலை மற்றும் நீர்வரத்துப் பாதையில் மின்கம்பங்கள் அமைக்க அனுமதி அளித்தது யார்? சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகமும், மின்சார வாரியமும் உடனடியாக இதில் தலையிட்டு, நீர்வரத்துப் பாதையிலும் சாலை ஓரத்திலும் அமைக்கப்படும் மின்கம்பங்களை மாற்று இடத்திற்கு மாற்ற தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனச் சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் வலியுறுத்தியுள்ளனர்.

# உடன்குடி பா.ஜ.க. நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

### முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் முன்னிலையில்!



உடன்குடி, ஆக.3-

பா.ஜ.க. நிர்வாகிகள் முன்னாள் அமைச்சர் அனிதா சு.ராதாகிருஷ்ணன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். சோடா ரவி, அயலக அணி துணை அமைப்பாளர் டேனியல் ஜெபசிங், திருச்செந்தூர் நகர துணைச் செயலாளர் மகாராஜன் ஆகியோர் ஏற்பாட்டில் கீழ நாலு மூலைக் கிணறு கிராம பா.ஜ.க. தலைவர் ராகுல் ஊடக பிரிவு கிளை செயலாளர் முத்து சிவக்குமார், மண்டல பிரிவு கிளை செயலாளர் சூரியா, உறுப்பினர்கள் அர்ச்சுனன், சந்தோஷ், உதயநிதி, சரண், நவின் குமார், முத்து ராஜா, கங்கா துரை ஆகியோர் விலகி தண்டுபத்து அலுவலகத்தில் முன்னாள் அமைச்சரும் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான அனிதா சு. ராதாகிருஷ்ணன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

இதில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் உமரி சங்கர், மாநில பிரச்சாரக் குழுத் தலைவர் ஜெசி பொன் ராணி, உடன்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் மதன்ராஜ், முன்னாள் ஒன்றிய செயலாளர் சக்தி வேல், மாவட்ட பிரதிநிதி ராஜபிரபு, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் செந்தில், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் அருணகிரி, கானம் பேரூராட்சி முன்னாள் தலைவர் செந்தமிழ் சேகர், தளபதி எடிசன், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் மகேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கோவை மாநகர் மாவட்டம், சாய்பாபா காலனி பகுதி, 32வது வட்டக் கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் பகுதி கழக பொறுப்பாளர் கே.எம்.ரவி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.முருகன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆனந்த்குமார், பொதுக்குழு உறுப்பினர் ச.கார்த்திகேயன், வட்டக் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன் பாபு, சண்முகம், அப்பு தாஹிர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



பொன்னமராவதி பாப்பாயி ஆச்சி அரசு மருத்துவமனையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை விழுதுகள் வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தினை முன்னாள் அமைச்சர், திருமயம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ரகுபதி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.